# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதிவிசேஷமானது

අංක 2038/29 - 2017 සැප්තැම්බර් 28 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.09.28

*2038/29 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

**2017 ஆம் ஆண்டின் 233 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல. : 4-3/4/2016/எல்ஓ/380.
பிர. செ. குறிப்பு இல. : ஜே/டீஎஸ்/2/9/4/15-2016.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம்,காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ் அட்டவணையின் 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையைப் பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
"மிஹிகத மெதுர",
இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2017,செத்தெம்பர் 25.

**அட்டவணை**

**1. காணி எடுத்தல் உத்தியோகத்தர்** :- பிரதேச செயலாளர், யாழ்ப்பாணம்.

**2. காணியின் விபரம்**:- வட மாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில், இல. J/72- சின்னக்கடை கிராம அலுவலர் பிரிவில், யாழ்ப்பாணம் நகரம் (யாழ்ப்பாண மாநகர சபை எல்லையினுள் பிரிவு இல. 1, யாழ்ப்பாணம், கொட்டுவ) கிராமத்தில் அமைந்துள்ள, யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2016.11.30 ஆந் திகதிய Ya/JFF/2016/317 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் துண்டு 'ஏ' எனக் காட்டப்பட்ட சுமார் 0.0485 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட எல்லைகளுள் அமைந்த காணித்துண்டு :

**01. துண்டு 'ஏ' - காணியின் பெயர் தெரியாது, வரிமதிப்பீட்டு இல. 28, பிரதான வீதி - விஸ்தீரணம் : 0.0485 ஹெக்டயார்**

வடக்கு : முடியப்பு றெமிடியஸ் உரிமை கோரும் பெயர் தெரியாத காணி மற்றும் வீதி (வீ.அ.அ.) ; கிழக்கு : வீதி (வீ.அ.அ.) மற்றும் எஸ். துரைசிங்கம் உரிமை கோரும் பெயர் தெரியாத காணி ; தெற்கு : எஸ். துரைசிங்கம் உரிமை கோரும் பெயர் தெரியாத காணி, சிவலிங்கத்தின் மனைவி சுஜேந்தினி உரிமை கோரும் பெயர் தெரியாத காணி மற்றும் எஸ். தம்பிப் பிள்ளையின் உரிமையாளர்கள் உரிமை கோரும் பெயர் தெரியாத காணி; மேற்கு : தம்பிப்பிள்ளையின் உரிமையாளர்கள் உரிமை கோரும் பெயர் தெரியாத காணி மற்றும் முடியப்பு றெமிடியஸ் உரிமை கோரும் பெயர் தெரியாத காணி.

*10-342*

---

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

**2017 ஆம் ஆண்டின் 232 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல. : 4-3/4/2016/எல்ஓ/374.
பிர. செ. குறிப்பு இல. : டீஎஸ்/வீஎஸ்/எல்பீ/ஏசீகியூ/ஜே -198-1.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம்,காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ்

அட்டவணையின் 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையைப் பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
"மிஹிகத மெதுர",
இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2017, செத்தெம்பர் 22.

**அட்டவணை**

*1.* **காணி எடுத்தல் உத்தியோகத்தர்**:- பிரதேச செயலாளர், வலிகாமம் தெற்கு.

*2.* **காணியின் விபரம்**:- வட மாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் தெற்கு பிரதேச செயலாளர் பிரிவில், இல. J/198 - சுன்னாகம் நகர மத்தி கிராம உத்தியோகத்தர் பிரிவில், சுன்னாகம் கிராமத்தில் அமைந்துள்ள, யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2016.12.30 ஆந் திகதிய Ya/UDV/2016/308 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் துண்டு 'ஏ' எனக் காட்டப்பட்ட சுமார் 0.3302 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட எல்லைகளுள் அமைந்த காணித் துண்டு :

01. **துண்டு 'ஏ' - உலகிதேர்படமும், ஆண்டிச்சி குடியிருப்பும், ஆண்டியன் வளவும் ஆண்டிச்சி குடியிருப்பும் கிணற்றடியும், பெரியபுலமும் மறு பிரிவுகளும் - விஸ்தீரணம் : 0.3302 ஹெக்டயார்**

வடக்கு : கந்தசாமி உலகநாதன் உரிமை கோரும் பெயர் தெரியாத காணி மற்றும் அடிபாதை ; கிழக்கு : அடிப்பாதை, பாலசிங்கம் சஞ்சீவ் உரிமை கோரும் பெயர் தெரியாத காணி மற்றும் அடிப்பாதை ; தெற்கு : அடிப்பாதை மற்றும் உரிமை கோருபவர் மற்றும் பெயர் தெரியாத காணி; மேற்கு : உரிமை கோருபவர் மற்றும் பெயர் தெரியாத காணி, குணரத்தினம் சுதாகரன், மனைவி நிஜருபி உரிமை கோரும் மற்றும் பெயர் தெரியாத காணி மற்றும் கந்தசாமி உலகநாதன் உரிமை கோரும் பெயர் தெரியாத காணி.

10-343

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.